J E S U S I S L O R D

# தேவ சித்தம்

"எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன் மேல் இரக்க-மாயிருக்கிறார்; எவனை கடினப்படுத்தச் சித்தமாயிருக்கிறாரோ அவனைக் கடினப்படுத்துகிறார்", ரோமர் 9:18.

அருமையான தேவஜனமே, கர்த்தருடைய சித்தம் அவரது படைப்புகளில் வெளிப்பட்டிருக்கின்றது. விண்ணிலும், மண்ணிலும், தேவ பிள்ளைகள் தேவனு-டைய சித்தத்தின்படி செயல்பட வேண்டும் என பரம தந்தை விரும்புகின்றார். உதாரணமாக நாம் உருவாக்குகிற அத்தனை பொருள்களும் (கார்கள், எலக்டிரானிக்ஸ், கம்புயுட்கர்கள், இயந்திரங்கள், மற்றும் பல சாதனங்கள்) ஒரு அடிப்படை தத்துவத்தின்படிதான் செயல்படுகின்றது. ஆனால் நாம் ஒருபொழுதும் இதைக்-குறித்து, தயாரிப்பாளர்களை கேள்வி கேட்பதில்லை. நியுட்டனின் மூன்றாம் விதியைக் குறித்தோ அல்லது தாம்சனின் தத்துவத்தையோ ஒருபோதும் நாம் சந்தேகப்படுவதில்லை. ஆனால் பரம தந்தை உருவாக்கிய நீங்களும், நானும் ஏன் சரியாக சிந்திப்பதில்லை மற்றும் செயல்படுவதில்லை. அவரது தத்துவங்கள் அவரின் வார்த்தைகள்; அதைவிட்டுவிட்டு நாமே தத்துவங்களை உருவாக்குவதால், நமது பேச்சுகள் (வார்த்தைகள்) நமது செயல்களுக்கு ஆதாரங்களாகின்றன.

இந்த சூழ்நிலையில், தாம் உருவாக்கிய ஆத்துமாக்கள் (உயிர்கள்) கெட்டுப்போவதை பார்க்கும் பரம தந்தை தமது கிருபையை (மாறாத அன்பை) வெளிப்படுத்துகின்றார். தேவசித்தம் நாமெல்லாரும் அந்த கிருபையை பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதுதான். இதை நிறைவேற்றுகிறவன், தனது சொந்த சித்தத்தை (free will) தேவனிடம் கொடுத்துவிடுகிறான். தேவ கிருபைதான் அவரது இரக்கத்தையும், தயவையும் நமக்கு அளிக்கின்றது. இதை ஏற்றுக்கொள்ள மனமில்லாதவன், தனது சுய சித்தத்தையே பெரிதாக நினைத்து செயல்படுவதால், தன்னைத்தானே போற்றி, தேவனைவிட்டு பிரிந்து போகிறான். தேவன் அப்படிபட்டவர்களுக்கு தூரமாக நிற்கின்றார். பாருங்கள், தேவன் நம்மைவிட்டு விலகினால், சாத்தானுக்கு கொண்டாட்டம்தான். அதனால் அவன் இஷ்டப்படி சுய பெருமை பேசும் பல சமுதாயங்களை இன்று உலகத்திலே உருவாக்கி வைத்திருக்கின்றான். கிறிஸ்துவின் பிள்ளைகள் தேவ இரக்கத்தை பெற்றவர்கள்; பாவ மறக்கழுவப்பட்டவர்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் எல்லாவிதமான ஆசிர்வாதங்களுக்கும் பாத்திரமானவர்கள். நிச்சயமாக தேவாதி தேவன், இரட்சிக்கப்பட்ட நம்மீது இரக்கமுள்ளவராய் இருக்கின்றார். துன்மார்க்கரின் உள்ளத்தையோ கடினப்-படுத்துகின்றார். ஆண்டவராகிய இயேசுவை தேவகுமாரனென்று அறிக்கை செய்யாத-வர்கள் துன்மார்க்கமாய் வாழ்கின்றார்கள்.

கர்த்தரின் பாதையில் நடப்போம், வெற்றி நிச்சயம்.

கர்த்தருக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக, ஆமென், அல்லேலுயா.